[22nd November 1963

(இ) ஆமெனில், இப்போது அது இயங்கி வராததற்குக் காரணமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, வேப்பூர் பஞ்சாயத்து யூனியனில் டிஸ்ட்ரிக்ட் சூபரின்டெண்டெண்ட் அவர்கள் வந்து போலீஸ் ஸ்டேஷன் திறப்பு விழா செய்தார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆனால் அது இயங்கி வரவில்லை. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. வேப்பூரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று, 15 மைல் சுற்றளவில் போலீஸ் ஸ்டேஷன் இல்லாததால் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி திருச்சி சூபரின்டெண்டெண்டு ஆப் போலீஸ் சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறார். ஆனால் நாட்டில் இருக்கும் நெருக்கடி காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

State Housing Board

* 482 *Q*.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the Housing Board refuses to give the details of the cost of Low Income and Middle Income Group houses to the owners;

(*b*) whether any representation has been received by the Government in the matter; and

(*c*) if so, the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) : Representations have been received by the Chairman, State Housing Board, and the Administrative Officer of its Madras Housing Unit, from the allottees, for furnishing the details of the cost of the houses. Out of 899 Low Income Group and Middle Income Group houses completed by the State Housing Board and handed over on hire-purchase, accounts in respect of 587 houses have been finalised and the details of the cost have been furnished to the allottees. In the case of certain others, the accounts will be finalised shortly, as the details of cost of amenities called for from the Corporation have just been received by the State Housing Board and will be furnished to the allottees after they have been finalised. In the case of certain other houses, the accounts could not be furnished as their sites are covered by Writ Petitions pending in the High Court. The allottees, whose accounts have not been finally settled, are being furnished the approximate cost of the houses.

22nd November 1963]

திரு. க. ர. நல்லசிவம் : வீட்டு வசதி போர்டார் நிலங்களை குறைந்த விலைக்கு ஆர்ஜிதம் செய்து அதிக விலைக்கு வீடு கேட்டவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே, இது உண்மை தானா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடிதான் இருக்கமுடியும். ஏன் என்றால் வீடுகள் கட்டுவதற்கு உதவாக்கரையாக இருக்கும் நிலங்கள் எல்லாவற்றையும் எடுத்து, செலவழித்து நல்ல நிலமாகச் சீர்திருத்தி, அமினிட்டீஸ் எல்லாம் செய்து, ரோடு போட்டு, லைட் போட்டு, வாட்டர்-சப்ளை எல்லாம் போட்டு, ஸுயெஜ் போட்டு பிறகு கொடுக்கும்போது விலை கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும்.

Police Out-post, Perumbalai

* 483 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Home be pleased to state with reference to Question No. 1053 answered on 1st November 1962—

(*a*) whether the Government have received any request from the Inspector-General of Police for the conversion of the Perumbalai Police Out-post into a regular Police Station; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ)* இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—REQUEST FOR A HALF-HOUR DEBATE.

திரு. ப. உ. சண்முகம் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மன்ற விதிகளின் 40-வது விதியின்படி, தங்களை நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்வது இது ஆகும்.

இன்றைக்கு பதிலளிக்கப்பட்ட கேள்விகளுக்குள் 464-வது கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது உண்மைக்கு நேர்மாறானதைக் குறிப்பிட்டார்கள். அந்த நேரத்தில் நான் குறுக்கிட்டு கேள்வி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. பின்னால் இதைப் பற்றி விவாதிக்கலாம் என்று, இறுதியில் வேண்டிக் கேட்டுக் கொள்ளலாம் என்று இருந்தேன். உண்மைக்கு நேர்மாறாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்த காரணத்தினால், இதைப் பற்றி ½ மணி விவாதத்திற்கு நேரம் ஒதுக்கி விவாதிக்க ஒப்பம் அளிக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER: The point is this. If the answer given is not satisfactory and a half-hour discussion is desired, then hon. Members must put questions and elicit information. They may afterwards say that the answer given was not satisfactory and so